IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சங்க இலக்கியத்தில் களவு இன்பம்

பகுதிநேர ஆய்வாளர்
**தி. பச்சையம்மாள்**
கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641029.
நெறியாளர்

**முனைவர் மு.ருக்மணி**
தமிழ் துறை உதவிப் பேராசிரியர் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் - 641029

**ஆய்வுச்சுருக்கம்**:
நம் முன்னோர்களின் இயற்கை நெறியோடு வாழ்ந்த வாழ்வை அறிய உதவும் அரிய நூல்களே சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் அகம், புறம் எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அகநூல்கள் மக்களின் இன்ப உணர்வை வெளிப்படுத்தும் களவு , கற்பு பற்றியதாகவே இருந்தன. தமிழர்கள் களவும் , கற்பும் உடைய வாழ்வை மேலானதாகக் கருதியிருக்கக்கூடும் எனவே தான் அன்பின் ஐந்திணைகளை வகுத்து, அதற்கேற்ப முதல், கரு, உரிப்பொருள்களைப் பகுத்தனர். அதைப் பின்பற்றியே புலவர்கள் பாடல்களை இயற்றினர். அவ்வாறு அகவாழ்வில் தலைவன் தலைவி மேற்கொண்ட களவு இன்பம் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையானது ஆய்வு செய்கிறது.
**திறவுச்சொற்கள்**: சங்க இலக்கியம் , களவு , தலைவன் , தலைவி

**முன்னுரை**:
இலக்கியங்கள் ஒரு சமுகத்தின் வளர்ச்சியைக் கண்டறிய உதவுகின்றன. அவ்வகையில் நோக்கும் போது தமிழில் சங்க இலக்கியமாகத் திகழும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் முதன்மையானதாக விளங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவை அகப்பொருள் பற்றியன. களவு, கற்பு என்பது அகப்பொருளின் பிரிவுகளாகும். அக்காலத்தில் இவை ஓர் ஒழுக்கங்களாகக் கருதப்பட்டு நன்முறையில் பின்பற்றப்பட்டன.

**சங்க இலக்கியம்:s**
**"இந்திய இலக்கியங்களின் தலைமை ஊற்று என்று சங்க இலக்கியங்கள் போற்றப்படுகின்றன. முச்சங்கங்கள் வைத்து முத்தமிழ் வளர்த்த முன்னோர், அச்சங்கங்களில் உருவாக்கித் தந்த அருந்தமிழ் நூல்களே சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்றன.**"1 முதல் மற்றும் இடைச் சங்கங்கள் கடற் கோளால் அழிந்த பின்பு கடைச்சங்கத்தில் கண்டெடுக்கப்பட்ட இலக்கிய நூல்களை மன்னர்களும் புலவர்களும் ஒருங்கிணைத்துத் தொகுத்தனர். அவர்களின் முயற்சியால் 2381 பாடல்களின் தொகுப்பான

சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்தன. இவற்றை அகம், புறம் எனப் பிரித்தனர்.அகம் தலைமக்களின் காதல், கற்பு வாழ்க்கையினைக் பாடுபொருளாகக் கொண்டது. போர், கொடை முதலான பிறவற்றைப் புறம் என்றனர்.

**அகப்பொருள்:**

அகம் என்பது உள்ளமாகிய மனதை உணர்வால் நுகர்ந்து இன்பமும் காம இன்பத்தையும் ஆகுபெயராய் இச்சொல் உணர்த்தும் ஓர் ஆணும் பெண்ணும் திருமணத்திற்கு முன்பு ஊழியின் காரணமாக தனிமையில் கூடி இன்பம் நுகர்ந்து மகிழ்வதைக் களவு என்றும் பின் ஊரும் உலகம் அறிய திருமணம் புரிந்து சான்றோர் போற்ற வாழும் உலகியல் வாழ்க்கையைக் கற்பு என்றும் இலக்கிய இலக்கணங்கள் கூறுகின்றன. இவ்விரண்டு வாழ்க்கையை அகம் என்ற பொதுச் சொல்லால் குறிப்பிட்டனர்.

**“அகம் என்பதற்கு ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்து பிறந்த பேரின்பம் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தன் தமக்கு புலனாக இவ்வாறு இருந்தன கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே முகர்ந்து இன்பம் ஊறுவதோர் பொருள் ஆதலின் அதனை அகம் என்றனர்**” 2. தொல்காப்பியரும் பொருள் அதிகாரத்தில் அகப்பொருளைப்பற்றி விரிவாக விளக்கியுள்ளார். நம் பண்பாட்டை இன்றளவும் காத்து நிற்பதில் முதலிடம் பெறுகின்றார். அன்பின் ஐந்திணைகள் இதன் களங்களாக அமைந்தன.

**களவு:**

பண்டைய தமிழகத்தில் களவொழுக்கமே மிகுதியாக காணப்பட்டது இல்லறம் என்பது களவில் தொடங்கி கற்பில் முடிவடைந்தது. களவு நிகழ்வதற்குரியனவாக தொல்காப்பியர் கூறுவன.

**“ஒன்றே வேறே என்று இரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடி வரை இன்றே**” 3

காதல் வயப்படும் தலைவனும், தலைவியும் முற்பிறவியில் செய்த நல்வினைக் காரணமாகவே பத்து குணங்கள் (பிறப்பு, ஒழுக்கம், வலிமை, வயது, அழகு , அன்பு , நிறை , அருள் , செல்வம் , அறிவு) ஒத்து இப்பிறப்பிலும் மீண்டும் இணைவர். களவு ஒழுக்கமாவது, “**அன்பு, அறிவு, அழகு குடிப்பிறப்பு முதலியவற்றால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் நல்லூழின் செயலால் பிறர் கொடுக்கவும் அடுப்பவுமின்றி தாமே எதிர்ப்பட்டு உலகத்தார் அறியாது மறைந்தொழுகுதல் ஆகும். பொதுவாகக் களவு என்பது ஐம்பெருங் குற்றங்களில் ஒன்றாகக் கூறப்படும். ஆனால் இங்கே களவு என்பது அத்தன்மையின்றி ஒத்த அன்புடைய தலைவியினது இசைவறிந்து தம் சுற்றத்தார் அறியாது காதலால் உள்ளம் கலந்து பழகும் சிறந்த நட்பாதலால் சிறப்புடைய அறம் எனவே கொள்ளப்படும். அறநிலை வழுவாமல் ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் ஆகிய இருவரும் தமது நெஞ்சக் கலப்பினை பிறர் , உலகத்தார் அறியாதபடி மறைந்து**

**ஒழுகினாராதலின் கரந்த உள்ளத்தாராகிய இவ்விருவரது ஒழுகலாறு களவு என்ற சொல்லால் வழங்கப்படுவதாயிற்று**"4

**சங்க இலக்கியக் காதல்:**

சங்க இலக்கியக்காதல் அன்பு , அரவணைப்பு , வலிமை , வாய்மை , பண்பு , பிரிவு , காத்திருத்தல் , கலங்குதல் , மனவுறுதி , நட்பு , நம்பிக்கை , ஆற்றுதல் தேற்றுதல், தியாகம் போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையிலிருந்தது.

**காதலர்களின் சந்திப்புகள்:**

தினை புனங்காக்க செல்லும் தலைவியைக் கண்டு தலைவன் இயற்கைப் புணர்ச்சி எய்துவான். தோழியின் அனுமதி பெற்று தலைவியை அவ்விடத்திலேயே மீண்டும் சந்திக்க இசைவு பெற்று இருவரும் மகிழ்ந்திருப்பர். இது பகற்குறி என்று சூட்டப்படுகிறது. தலைவன் தலைவியைச் சந்திக்கத் தோழியிடம் அனுமதி பெறுவது என்பது அவசியம் ஏனெனில் களவு ஒழுக்கமானது மறைபொருளாக நிகழ்வது ஊர் அலர் தூற்றக்கூடியது. தலைவியின் களவு ஒழுக்கத்தைக் கற்பாக மாற்ற அதற்கு இடையூறுகள் ஏற்படாத வண்ணம் தலைவனுக்குப் பகல், இரவு கூட்டங்களையும் கூட்டுவாள். பகல் கூட்டமானது தினைகள் முற்ற நடைபெறும். வேட்டுவர்கள் தினைகள் கொய்து சென்ற பின்னர் தலைவி தினை குணம் காக்க வரமாட்டாள் எனவே பகல் கூட்டமானது தடைப்படும். தலைவன் இதனை அறிந்து கொண்டு தலைவன் இரவு கூட்டத்தை வேண்டுவான்.

**"யாங்குச்செய் வாங்கொல் தோழி! பொன் வீ**
**வேங்கை ஓங்கிய தேங் கமழ் சாரல்,**
**பெருங்கல் நாடனோடு இரும்புனத் தல்கிச்,**
**செவ்வாய்ப் பைங்கிளி யோப்பி , அவ்வாய்ப்**
**பெருவரை யடுக்கத் தருவி யாடிச்,**
**சாரல் ஆரம் வண்டு பட நீவிப்,**
**பெரிதமர்ந்தியைந்த கேண்மை சிறுநனி**
**அரிய போலக் காண்பேன் விரிதிரைக்**
**கடல் பெயர்ந் தனைய வாகிப்,**
**புலர் பதங் கொண்டன ஏனற் குரலே? "**5 (நற்றிணை-259)

கடல் நீர் வற்றினால் காய்ந்த இடம் நிறம் மாறுவது போலப் பசுமையான கதிர்கள் முற்றி நிறம் மாறும் இதனைத் தலைவிக்குத் தெரிவிப்பது போல தலைவனுக்குத் தெரிவிக்கின்றாள் தோழி . இனி முன்பு போல் அவனைக் காண்பது அரிதாகும். அது நீங்கிய வழி யான் இறந்து பட கூடும் என்று தலைவியும் புலம்புகிறாள்.

**காதலின் ஆழம்:**

**"காதல் என்பது காதலிப்போர் இருவர் உள்ளத்திலும் கண்களிலும் காணப்படும் உண்மையான அன்பே ஆகும் என்று அமெரிக்கேட் பெக்குனில்காம் தன் புத்தகத்தில் கூறியதாக (தட்சிணாமூர்த்தி 1994)**

**கூறுகின்றார்**." தலைவன் தலைவியை விட்டுக் கொடுக்காது தாங்கிப் பேசி தோழிக்கு தன் காதலின் ஆழத்தைப் புரியவைக்கின்றான்.

**"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று**

**நீரினு மாரள வின்றே சாரற்**

**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**

**பெருந்தேனி னிழைக்கும் நாடனொடு நட்பே**." 6

தோழி , உயர்ந்த மலையினிடத்தே பூத்திருக்கும் வலிய கொம்புகளைக் கொண்ட குறிஞ்சிப் பூக்களிலிருந்து தேன் எடுக்கும் இயற்கை வளம் செழிக்கும் இடத்தில் வசிக்கும் மலை நாடான் என் தலைவன். எனக்கும் என் தலைவனுக்கும் உள்ள நட்பானது நிலத்தை விட பெரியது , அந்த வானத்தை விட உயரமானது, கடலினும் அளக்க இயலாத ஆழத்தை உடையது என்கிறாள் தலைவி. இப்பாடலில் தலைவன் மீது தலைவி கொண்டுள்ள நம்பிக்கையும் காதலின் ஆழத்தையும் வெளிப்படுத்துகின்றது.

**காதலின் வலிமையும் , வாய்மையும்:**

களவின் வேறானது இருவருக்குமான அன்பிலும் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கையிலும் தான் உள்ளது. தலைவன் பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியை பிரிய இயலாது பிரிந்து செல்கின்ற போது தான் வருத்தமுறுவேன் என்று எண்ணிய தோழிக்கு தன் காதலின் வலிமையை உணர்த்தும் பாடல்.

**"நின்ற சொல்லர் நீடு தோன்றி இனியர்**

**என்றும் என்றோள் பிரிபறி யலரே**

**தாமரைத் தண்தா தூதி மீமிசைச்**

**சந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**

**புரைய மன்ற புரையோர் கேண்மை;**

**நீரின் றமையா உலகம் போலத்**

**தம்மின் றமையா நந்நயத் தருளி**

**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**

**சிறுமை யுறுபவோ செய்பறி யலரே?"** 7

தோழி என் தலைவன் வாய்மை தவறாதவன் என் மீது ஆழ்ந்த அன்பை உடையவன் தம்மை இல்லாத வாழ்க்கையை வாழ விரும்பாதவன் அன்று என் மீது அன்பை அருளைச் செய்தவன். தலைவன் அருகில் இல்லையேல் என் நெறியானது பசலை படர்ந்து பாழாதலை நினைத்து வருந்துபவர் என் தலைவர் என்று கூறுகிறார்.

**காதலில் உயர்வு தாழ்வில்லை:**

பெற்றோர் உற்றார் உறவினர்களுக்குத் தெரியாமல் தன் துணையைத் தேடிக் கொள்ள முயன்ற இளம் பாலர்கள் சங்க காலத்தில் அதிகமாக இருந்தனர்.

**"யாவும் ஞாயும் யாரா கியரோ**

**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**

**யானு நீயும் எவ்வுழி யறிதும்?**

**செம்புலப் பெய்ந்நீர் போல**

**அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.**" 8

களவு என்பது உறவு உடையாரிடத்தும் மட்டுமல்லாது உறவு இல்லாதவரிடத்தும் தோன்றும் என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று ஆகும்.

களவிற்குப் பிறகு , தந்தை வழி , தாய் வழி எவ்வித உறவில்லாத போதும் இரு பெற்றோர்களும் பேசி மனம் முடிப்பர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கொள்கையின் அடிப்படையில் களவு நிகழ்ந்துள்ளது என்று வ.சுப.மாணிக்கம் அவர்கள் தமிழ் காதல் என்ற நூலில் கூறுகிறார்.

**காதலில் காத்திருத்தல்:**

'**பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்**

**துனி மலி துயரமோடு அரும்படர் உழப்போள்**

**கையறு நெஞ்சிற்கு உயவுத்துணையாகச்**

**சிறுவரைத் தாங்குவை யாயின்**

**காண்குவை மன்னாற் பாண**! **எம் தேரே**!' 9

குறிப்பிட்ட காலத்தை வரத் தவறியமையால் ஏவி தலைவன் தன் வரவை தலைவிக்குத் தெளிவுபடுத்துகின்றான்.

**காதலில் பிரிவும் , துன்பமும்:**

களவு வெளிப்பட்டபின் தலைவனைக் காணாது தலைவி மிகவும் தவிக்கின்றாள். இரவு நேரத்தில் வந்தாலும் காண வாய்ப்பின்றி தாய் காப்பதாலும் விரைவில் திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறு தோழி மறைமுகமாகத் தலைவனைத் தூண்டுகிறாள்.

**"பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென**

**ஆகத்து அரும்பிய சுணங்கும் , வம்புவிடக்**

**கண்ணுருத்து எழுதரு முலையும் நோக்கி,**

**எல்லினை பெரிது எனப் பன்மாண் கூறிப்,**

**பெருந்தோள் அடைய முயங்கி , நீடு நினைந்து,**

**அருங்கடிப் படுத்தனள் யாயே** " 10

இவ்வாறு காதல் தரும் இன்பமான பிரிவை தலைவி ஏற்று காத்திருப்பதை இப்பாடல் சுட்டிக்காண்பிக்கிறது.

**காதலில் ஆற்றுதலும் தேற்றுதலும்:**

தலைமகனைப் பிரிந்து வருந்தும் தலைமகளைத் தோழி தேற்றியது.

**"கேளா குவர் , தோழி கேட்பின்**

**விழுத்திது கழிவ தாயினும் நெகிழ்நூற்**

**பூச்சே ரணையிற் பெருங்கவின் தொலைந்தநின்**

**நாட்டுவார் கேட்பின் நீடலர் , மாதோ,**

**ஒலிகழை நிவந்த ஓங்குமலைச்சாரற்**

**புலி புகா வுறுத்த புலவு நாறு கல்லளை**

**ஆறுதல் மாக்கள் சேக்குங்**

**கோடியர் பிறங்கல் மலையிறந் தோரே**" 11

தலைவி மலர் பரப்பிய படுக்கையில் துயில் கொள்ளாது. தன் பேரழகு சிதைந்த துயரத்தைத் தலைவர் கேட்டிலர் போலும் கேட்டிருப்பவர் ஆயின் காலம் தாழ்த்தாது விரைவில் வந்து காண்பார்.

**முடிவுரை:**

சங்ககால மக்கள் தன் வாழ்க்கைத் துணையைத் தாமே தேர்வு செய்யும் உரிமையை எடுத்துக்கொண்டனர். பெற்றோர் அதனை ஏற்றும் ஏற்காமலும் இருந்தனர். ஆனால் சமுகம் அதற்கு ஆதரவு அளித்து பல்லாண்டு காலம் நிலைபெறச் செய்திருக்கிறது இதனால் அகத்துறைகள் மூலம் காதலர்கள் இருவரும் மறைந்தொழுகும் முறைகளையும் , களவொழுக்க வாழ்க்கையும் அவர்களின் உள்ளத்து உணர்வுகளையும் தெரிந்து கொள்ள முடிந்தன.

**துணை நூற்பட்டியல்;**

1. சா.நரசிமாபானு, இலக்கியத்தென்றல், (ப-9)
2. புலவர் குழந்தை உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், முதற் பகுதி, வேலா வெளியீடு,(ப-2)
3. புலியூர்க்கேசிகன்உரை(2021),தொல்காப்பியம், பாரி நிலையம்,சென்னை.
4. வி.சி.சசிவல்லி,தமிழர் திருமணம்(பக் 20 -21)
5. புலியூர்க்கேசிகன் உரை, நற்றிணை,குமரன்பதிப்பகம்,சென்னை.
6. இராமரத்தினம்,குறுந்தொகை,கங்கை புத்தகநிலையம், சென்னை.
7. புலியூர்க்கேசிகன் உரை ஐங்குறுநூறு,அமராவதி, சென்னை.
8. புலியூர்க்கேசிகன் தெளிவுரை, அகநானூறு,விஜயாபதிப்பகம், சென்னை.